**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**MCOP. No. 34/2021**
**2025ம் வருடம் மார்ச் மாதம் 18ம் நாள் செவ்வாய்கிழமை**

**ம.சா.1 – சோனைமுத்து**

**2வது எதிர்மனுதாரர் தரப்பில் கு.வி**

நான் விவசாயம் செய்து வருகிறேன். இறந்துபோன குண்டுமலை எனக்கு உறவினர் இல்லை ஆனால் எங்கள் ஊரைச்சேர்ந்தவர். இறந்துபோன குண்டுமலை விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தில் மானாமதுரையிலிருந்து அவரது ஊருக்கு சென்று கொண்டிருந்தார். தேதி மாதம் எனக்கு ஞாபகம் இல்லை. மதியம் சுமார் 2மணியளவில் விபத்து ஏற்பட்டது. குண்டுமலை இருசக்கர வாகனத்தில் சென்ற போது மீன் வண்டி அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டது. குண்டுமலையின் இருசக்கர வாகன எண் எனக்கு தெரியாது. எனக்கு எழுத படிக்க தெரியாது. குண்டுமலை மீது மோதிய மீன் வண்டி இராமநாதபுரத்திலிருந்து சிவகங்கை நோக்கி சென்றது. மீன் வண்டி தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்தது. விபத்து ஏற்பட்ட உடன் ஆம்புலன்சுக்கு போன் செய்தார்கள். குண்டுமலையை ஆம்புலன்சில் ஏற்றிச் சென்றார்கள். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
**மானாமதுரை**